**O.S.No.254/2009**

**Date:04.07.2018**

வாதி தரப்பு சாட்சி 2 – முருகன், த-பெ.பிச்சைராமன்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் 3ம் வாதி என்றால் சரிதான். 1, 2 வாதிகள் என் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 4, 5 வாதிகள் என் சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். இந்த பிராதில் தாவா 3வது இலக்கச் சொத்து என் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் தாவா 3வது இலக்கச் சொத்தைப் பொறுத்து மட்டும் சாட்சி சொல்ல வந்துள்ளேனா அல்லது மற்ற சொத்துக்களுக்கும் சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் அனைத்து சொத்துக்களுக்கும் சாட்சி சொல்ல வந்துள்ளேன். 1 முதல் 5 இலக்கச் சொத்துக்கள் 01.10.1983ல் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்து கிரயம் வாங்கிய 1 முதல் 5 கிரயப் பத்திரங்களில் சர்வே எண்.158ல் கண்டுள்ள சொத்துக்கள் கிரையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து விபரத்தில் புதிய சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புதிய சர்வே எண்கள்தான் சர்வே எண்.158க்கு கட்டுப்பட்டுள்ளது என்பதை இணைத்துக் காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.26 ஆவணம் 08.02.1999ல் பெறப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்கள் ஏற்பட்டு, சுமார் 16 ஆண்டுகள் கழித்து இந்த ஆவணம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் எந்த பட்டா எண்ணில் தாவாச் சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் இல்லை என்றால் பட்டா எண் இல்லை. வா.சா.ஆ.27 ஆவணம் சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டதிலிருந்து 22 ஆண்டுகள் கழித்து பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் பட்டா எண்.681, 79 என்று குறிப்பிட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.26ல் அந்த பட்டா எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.33 ஆவணம் தினத்தந்தியில் வெளியிடப்பட்ட ஆவணம் ஆகும். தினத்தந்தி என்ற வாசகம் இந்த ஆவணத்தில்

உள்ளதா என்றால் இல்லை. எந்த தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது, வருடம் குறிப்பிடப்படவில்லை. இந்த ஆவணம் எதிலிருந்து நகல் எடுக்கப்பட்டது என்றால் அசல் ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்டது. அந்த அசல் ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் இருக்கிறது. இந்த விளம்பரம் தினத்தந்தி பத்திரிக்கையில் வெளி வரவில்லை என்றாலும், இந்த ஆவணம் நான் மோசடியாக உற்பத்தி செய்துள்ளதால்தான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33ல் சர்வே எண்.158 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.158 என்று கிரையம் வாங்கி விட்டு, வா.சா.ஆ.33 அறிவிப்பை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றால் சர்வே எண்ணை மாற்றிவிட்டதால் தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 158 என்று தனியாக இல்லை, ஆனால் உட்பிரிவு செய்யப்பட்டு, அது குறிப்பிடப்பட்டுள்ளது. பிராதில் உள்ள புதிய சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.39 ஆவணத்தில் சொத்து விபரத்தில் முழுமையாக இல்லாமல் நான்குமால் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த அறிவிப்புகள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.41 முதல் வா.சா.ஆ.6 ரசீதுகள் ஆறு ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவை அனைத்தும் டிரஸ்டி என்ற பெயருக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறு ரசீது அனுப்பி விட்டு, மூன்று ஒப்புகை அட்டைகள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.40ல் தேவிகுமார், தம்யாதேவி, பாரதிதேவி வகையறாவினர் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கும் தாவாச் சொத்துக்களுக்கும் சம்பந்தம் உள்ளதா என்றால் உள்ளது. அவர்கள் இந்த வழக்கின் தரப்பினர்கள இல்லை என்றால் இல்லை. இந்த அறிவிப்பு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவாச் சொத்தில் இவர்களுக்கு உரிய இடமும் உள்ளதால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை நிருபண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் தெரியாது. குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.40 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.50 ஆவணம் எப்போது வாங்கப்பட்டுள்ளது என்றால் 2014ல் வாங்கப்பட்டுள்ளது. அதில் சர்வே எண்.158 என்று மட்டும்தான் காணப்படுகிறது என்றாலும், புதிய சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். நான்

கிரையம் வாங்கியதாகச் சொல்லப்படும் சொத்துக்கும், வா.சா.ஆ.50க்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.1ன் சாடசியத்தின் போது ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என் சாட்சியம் பொய் சாட்சியம் என்பதால் என் சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தற்போது உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இந்த ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான சொத்துக்கும், தாவாச் சொத்துக்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான சொத்துக்கள் பூமியிலேயே கிடையாது என்றாலும், நான் தவறுதலாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பூமியிலேயே இல்லாத சொத்துக்களை கிரையம் வாங்கியதால்தான் 11, 12 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்களை எங்கள் சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.